2018 ஜனவரி 10]

முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலனை செய்வதாக பாரத ரத்னா புரட்சித் தலைவர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவிலே அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அவருடைய அறிவிப்பிற்கிணங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

19—

அச்சகத்திற்கு புதிய கட்டடம்

***12275—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, களியக்காவிளை பேரூராட்சி, படந்தாலுமூடு தொழில் கூட்டுறவுச் சங்க அச்சகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழக மக்களின் தாயாகவும், ஒன்றரை கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுடைய இதய தெய்வமாக விளங்கி வருகின்ற எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் போற்றி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய இலட்சியங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்ற மாண்புமிகு

தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதி, களியக்காவிளை பேரூராட்சி, படந்தாலுமூடு தொழில் கூட்டுறவுச் சங்க அச்சகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட களியக்காவிளை பேரூராட்சி, படந்தாலுமூடு மார்க்கெட் அருகே 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்க அச்சகக் கட்டடம் மிகவும் பழுதடைந்து, மோசமான நிலையில் மழைக் காலங்களில் தண்ணீர் உள்புகுந்து, கட்டடங்களை சேதமுற வைக்கிறது. இதனால் அலுவலகக் கோப்புகள், அச்சக இயந்திரங்கள், binding machine–கள் பாழாகி செயலிழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அச்சகப் பணிகள் குறைவாகவே நடைபெறுகின்றன. இங்கு பணிபுரியும் தொழிலாளர்களின் நிலையும் சம்பளம் கிடைக்காமல் பரிதாபகரமாக உள்ளது. படந்தாலுமூடு தொழில் கூட்டுறவு அச்சகத்திலிருந்து அரசுத் துறைகள், கூட்டுறவு அமைப்புகள், உள்ளாட்சித் துறை அலுவலகங்கள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றுக்கு ledger–கள், பேரேடுகள், கணக்கு நோட்டுகள், புத்தகங்கள், Minute Books மற்றும் எழுதுபொருட்கள் தயாரித்து முறைப்படி வழங்கி வந்துள்ளனர். கட்டடம் சேதமுற்று அச்சகம் பாழ்பட்டுள்ள சூழ்நிலையில் ஆர்டர்களின் அடிப்படையில் எழுதுபொருட்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் சப்ளை செய்ய இயலவில்லை. இதனால் படிப்படியாக ஆர்டர்களும், பணிகளும் குறைந்து, பணிகள் முற்றிலும் நிறுத்தப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதைக் காரணம் காட்டி அரசு இங்குள்ள ஆர்டர்களை தக்கலை கூட்டுறவு அச்சகத்திலிருந்து வாங்கி பயன்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளனர். கட்டடம் பாழ்பட்டும், அச்சகங்கள் சேதமுற்றும், தொழிலாளர்கள் சம்பளமின்றியும் வறுமையில் வாழ்கின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனைப்

2018 ஜனவரி 10]

போக்க அச்சகத்திற்கு புதிய பொலிவான வசதி மிக்க கட்டடம், Offset Press *வசதியுடன் அமைத்துத் தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, படந்தாலுமூடு என்ற பகுதியில் கன்னியா தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் 31–1–1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது. இச்சங்கத்தில் தற்போது 70 சிறு அச்சக உரிமையாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இச்சங்கத்தின் பங்குத் தொகை ரூ.96,065 ஆகும். இச்சங்கத்தின் முக்கிய குறிக்கோளானது அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள், அரசு நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அலுவலகங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான படிவங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் போன்றவற்றை அச்சிட்டு விநியோகம் செய்வதாகும். இச்சங்கம் நடப்பாண்டில் 31–12–2017 முடிய 8 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது. இச்சங்கம் களியக்காவிளை பேரூராட்சிக்குச் சொந்தமான புதிய சர்வே எண் 418/9, பழைய சர்வே எண் 1952–17/1–ல் சுமார் 6 சென்ட் நிலத்தினை 2–12–1987 அன்று 25 வருட கால குத்தகைக்குப் பெற்றது. மேற்கண்ட குத்தகை நிலத்தில் சங்கம் தனது சொந்தச் செலவில் கட்டடம் கட்டி செயல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் தொழில் வணிகத் துறையால் 1,447 சதுர அடி அளவில் கட்டடம் கட்டப்பட்டு, சங்கத்தின் பெயரில் மின்னிணைப்புப் பெற்று இயங்கி வருகிறது. தற்போது, களியக்காவிளை பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தை அரசு நிர்ணயித்த விலையில் கிரயமாகப் பெற்று சங்கத்தின் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கைகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சூழ்நிலையில் சங்கமானது அவ்விடத்திலே தொடர்ந்து செயல்பட உத்தேசிக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வரும் கட்டடத்தைப் பழுது பார்க்க, தோராயமாக 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்யப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கான ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நிதி வழங்க பரிசீலனையில்*

உள்ளது. எனவே, மேற்கூறப்பட்ட சூழ்நிலையில் சங்கத்திற்கு புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாழடைந்த கட்டடம் சீரமைக்கப்பட வேண்டும். சீரமைப்பு நிதி 5 இலட்சம் ரூபாய் என்பது மிகவும் குறைவாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதுமட்டுமல்லாமல், அச்சு இயந்திரங்கள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. அவை, மிகப் பழைய அச்சு இயந்திரங்களாகும். அவற்றை மாற்றி அமைத்தால்தான், நமக்கு புதிய* order–*கள் வரும். நிறைய பணிகளையும் நாம் செய்ய முடியும். இப்போதே, 8 இலட்சம் ரூபாய் அளவிற்கு அங்கே* supply *செய்திருக்கிறார்கள். ஆனால், நிச்சயமாக சுமார் 20 இலட்சம் ரூபாய், 30 இலட்சம் ரூபாய் வரைக்கும்* supply *செய்யக்கூடிய அளவுக்கு திறன்மிகுந்த அச்சு இயந்திரங்களைப் பயன்படுத்தும்போது, நிறைய* order–*களைப் பெற்று அந்த அச்சகம்மூலம் நம்மால் நிறைய பணிகளைச் செய்ய முடியும். அந்த வகையில், அங்குள்ள அச்சு இயந்திரங்களை மாற்றியமைக்க வேண்டும். அச்சகம் அமைந்திருக்கும் இடத்திற்கு அருகில் அரசுக்கு சொந்தமான சுமார் ஓர் ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தில் தற்போது வாரம் இருமுறை மாட்டுச் சந்தை நடைபெறுகிறது. மேலும் தினசரி அங்கு மீன், காய்கறிகள் மற்றும் வேறு சில பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. அந்த இடம் போக்குவரத்துக்கு வசதியான பகுதியில் அமைந்திருக்கிறது. அந்தப் பகுதி படந்தாலுமூடு பஸ் டெப்போவிற்கு எதிரில் அமைந்திருப்பதாலும், பொது மக்கள் பெரிதும் பயன்படுத்தி வரக்கூடிய ஓர் இடமாகவும் உள்ளது. இந்தச் சூழ்நிலையில் அரசுக்குச் சொந்தமான அந்த இடத்தைத் தனியார் ஒருவர் தனக்குச் சொந்தமான இடம் என நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். எனவே, அரசு முனைப்புடன் செயல்பட்டு, அந்த இடத்தை மீட்டு, தொழில் கூட்டுறவுச் சங்க அச்சகத்தை அந்த இடத்தில் அமைக்க முன்வர வேண்டும். காலியாக உள்ள இடத்தில் அரசின் பயன்பாட்டிற்கும், உள்ளாட்சித் துறையின் பயன்பாட்டிற்கும், அதைப் பயன்படுத்தும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அங்கே இடம் ஏற்கெனவே* available

2018 ஜனவரி 10]

ஆக இருக்கிறது; ஓர் ஏக்கர் இடம் இருக்கிறது. அது, அரசுக்குச் சொந்தமான இடம் என்று கண்டறியப்பட்டுள்ளது. ஒருவர் case போட்டதை எப்படி handle செய்வது என்பதைப் பார்த்து, அந்த இடத்தை மீட்டாலே நமக்கு பெரிய அச்சகம் அமைப்பதற்கு இடம் இருக்குமென்று நான் நினைக்கிறேன். அதுமட்டுமல்லாமல், அங்கே சந்தையும் நடத்தலாம். அதில் பிரச்சினை ஒன்றுமில்லை. மக்களுக்குத் தேவையானவற்றை விற்பனை செய்வதையும் அங்கே continue செய்யலாம். ஆகையால், அங்கே புதிய அச்சகம் அமைத்துக் கொடுத்தே ஆகவேண்டும். பழைய அச்சகத்தில் இயந்திரங்கள் துருப்பிடித்திருக்கின்றன. அவற்றையெல்லாம் மாற்ற வேண்டிய கட்டாயம் இருக்கிறது. பணியாளர்களின் சம்பளமும் நிறைய நிலுவையில் இருக்கிறது. அதையும் இந்த அரசு பரிசீலனை செய்து உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் அதிக நிதிகள் ஒதுக்கி அச்சகக் கட்டடம் கட்டித் தந்து, புதிய அச்சு இயந்திரங்களைத் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, பொறியாளர்களை வைத்து அந்தக் கட்டடத்தின் உறுதித் தன்மை அறியப்படும். அதேபோன்று உறுப்பினர் சொல்லக்கூடிய, அருகில் இருக்கக்கூடிய இடத்தையும் ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

சைபர் பாதுகாப்பு கொள்கை

***17821—திரு. S. செம்மலை:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—